செய்தி வெளியீடு எண்:754 நாள்:21.09.2021

<u>செய்தி வெளியீடு</u>

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் தொடர்பாக 20.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைக்கும் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக வேளாண் துறை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை உயர் அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.** ஆலோசனைக் கூட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் முதன்மைச் செயலர் டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப, மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திரு. C. சமயமூர்த்தி இ. ஆ. ப., ஆகியோரது தலைமையின் கீழ், நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தலைமை உரை ஆற்றிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் முதன்மைச் செயலர் அவர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ், நூற்றுக்கணக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் ,திட்டங்கள் அனைத்தும் கிராம வளர்ச்சி ஒன்றையே நோக்கமாக வைத்து செயல்படுத்தப்பட்டு வருவதால் அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கே அமர்ந்து, திட்டங்கள் குறித்த விளக்கங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு, அதன் மூலம் கிராம வளர்ச்சிக்கு பெரிதும் தேவைப்படும் இனங்களை அதிக கவனத்துடன் செயல்படுத்தினால் மட்டுமே, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி என்பது உண்மையாகும் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் அவர்கள் வேளாண் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை. ஒருங்கிணைத்து "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" தமிழகத்தின் அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு இதற்காக நடப்பு 2021-22 ஆம் ஆண்டில், 2,500 கிராமங்கள் வேளாண்மைத் துறையினால் கண்டறியப்பட்டு, பல்வேறு ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குனர் அவர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் செயல்படுத்தப்படும் நீராதாரங்களை தூர்வாருதல்,

தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள் போன்ற முக்கிய இனங்கள் குறித்தும், தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் துறை மேலாண்மை இயக்குனர், சுய உதவி குழுக்கள் மூலம் விதைப் பண்ணைகள் அமைத்தல், ஒருங்கிணைந்த வேளாண்மை பண்ணையம், அங்கக வேளாண்மை பண்ணையம், வயல் வெளிப் பள்ளிகள், மண்புழு உரத் தயாரிப்புக்கூடம், தேனீ வளர்ப்பு போன்ற பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்து, இத்திட்டச் செயல்பாட்டிற்கு வேளாண்துறை அலுவலர்கள் பங்களிப்பு குறித்து எடுத்துரைத்தார்கள்.

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை, ஊரக வளர்ச்சி, மகளிர் மேம்பாட்டுத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகள் குறித்து மேலும் விரிவாக கலந்தாலோசித்து, கிராம அளவில் வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு கூட்டம் நிறைவு பெற்றது.



**கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான துறை ஒருங்கிணைப்புக் கூட்டம் 20.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் திரு சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9